## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 193/2018 | Date : 12.08.2025 | DW 2 |
|---|---|---|
| Name: உமாசங்கர் | த/பெ. வெங்கடாஜலம் | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சாட்சி தரப்பு சான்றாவணம் 1 எந்த வருடத்தினுடைய பட்டா என்றால் நத்தம் நிலவரித்திட்டம் பட்டா எண். 808 சர்வே எண். 300/17 பட்டாதாரர் பெயர் வீரா கவுண்டர் மகன் ஜம்பு என்பவருக்கு வழங்கப்பட்டது அதன் பரப்பளவு 0.0016.0 சதுர மீட்டர் ஆகும். அதுவீட்டு மனைநிலம் ஆகும். மேற்படி மனை நிலம் சுமார் 172 சதுர அடி ஆகும். சர்வே எண். 222/34 யில் பட்டாதாரர் பெயர் வீரா கவுண்டர் மகன் ஜம்பு என்பவருக்கு வழங்கப்பட்டது அதன் பரப்பளவு 0.0079.0 சதுர மீட்டர் ஆகும். அதுவீட்டு மனைநிலம் ஆகும். மேற்படி வீடு கட்டுவதற்கான மனை நிலம் சுமார் 850 சதுர அடி ஆகும். மொத்தம் 1022 சதுரஅடியாகும். இது வீட்டு மனை பட்டா என்றால் சரிதான். அதில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி பட்டா வீடு இருந்தால்தான் வழங்கமுடியும் என்றால் சரிதான். ஒருவருக்கு வீட்டிற்கு பட்டா வழங்கவேண்டும் என்றால் அவர் மேற்படி வீட்டில் சுமார் 3 ஆண்டுகாலம் வசித்திருக்கவேண்டும். மேற்படி மூன்றாண்டு காலம் அந்த வீட்டில் வசித்து வந்ததற்கான ஆவணங்களான தண்ணீர் வரி, வீட்டுவரி, மின்சார ரசீது ஆகியறைகள் எங்களிடம் தாக்கல் செய்தால்தான் பட்டா வழங்க முடியும் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை வைத்துதான் பட்டாதாரர் மேற்படி வீட்டில் வசித்து வநதார் என்று முடிவு செய்யமுடியும் என்றால் சரிதான். நாங்கள் பட்டா வழங்கியபோது பட்டாதாரரான ஜம்புவின் பெயரில் எத்தனை ஆண்டுக்கான வீட்டுவரி, தண்ணீர் வரி, மின்சார ரசீதுகள் இருந்தது என்றால் 1992-93 ம் வருடத்தில் நத்தம் நிலவரி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது அதனால் அது சம்மந்தமான ஆவணங்கள் தற்போது என்னிடம் இல்லை. ஒருவருக்கு நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா வழங்கும்போது அதற்கான ஆவணங்களை பரிசீலனை செய்துதான் வழங்குவோம். மேற்படி ஒருவருக்கு பட்டா வழங்குவதற்கு முன்பாக மனுதாரரின் ஆவணங்களை நேரிடையாக பரிசீலனை செய்து பட்டா வழங்குவோம் என்றாலும் அதற்கான ஆவணங்களை நாங்கள் கோப்பில் பராமரித்து வைப்போம் என்றாலும் சரிதான். அந்த சமயத்தில் யார் பட்டா வழங்குவதற்கான அதிகாரியாகவும் திடட அலுவலராகவும் இருப்பார்களோ அவர்கள் அந்தந்த ஆவணங்களை மனுதாரரிடம் பெற்று கோப்பில் வைத்துவிட்டு யாருக்கு பட்டா வழங்கியிருக்கிறார்கள் என்ற ஆவணங்களை மட்டும் எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பார்கள். அதனை நாங்கள் பராமரித்து அதற்கு தகுந்தாற்போல் ஆவணங்களை கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள குறிப்பேடுகளிலும், சர்வே எண்களிலும் உரிய மாற்றத்தை செய்வோம். நான் தாக்கல்

செய்துள்ள சா.த.சா.ஆ.1 மற்றும் சா.த.சா.ஆ. 2 ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்று சொன்னால் சா.த.சா.ஆ.1 மற்றும் சா.த.சா.ஆ.2 மட்டும் எங்களிடம் இருக்கும் அதை வழங்குவதற்கு உண்டான ஆவணங்கள் திட்ட அலுவலரிடம் இருக்கும். மேற்படி திட்ட அலுவலரிடம் உள்ள ஆவணங்களை எடுக்க முடியுமா என்றால் தற்போது அந்த அலுவலகம் இயங்காத காரணத்தினால் அது குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி 03.02.1988ம் தேதியில் தாவா சொத்தானது வீராகவுண்டர் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி என்னிடம் எந்த ஆவண குறிப்பும் இல்லை. மேற்படி வீரா கவுண்டரின் பெயரில் பழைய சர்வே எண். 43/2 புதிய சர்வே எண். 300/17 மற்றும் சர்வே எண். 222/34 ஆகிய பூமிகள் இருந்தது என்றால் அதற்கான ஆவணங்கள் தற்போது என்னிடம் இல்லை. அவ்வாறு வீராக்கவுண்டருக்கு வழங்கப்பட்டதாக எங்கள் அலுவலகத்தில் எந்த ஆவணமும் இல்லை. மேற்படி பூமி 1988ம் வருடம் HSD பட்டா எண். 803/79 என்று வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்திற்கான பட்டா ஏற்கனவே வீராகவுண்டர் பெயரில் வழங்கியுள்ளார்கள் என்றும் மேற்படி சொத்திற்கான அனைத்து ரசீதுகளும் வீரா கவுண்டர் பெயரில் தான் உள்ளது ஜம்பு பெயரில் எந்தவொரு ஆவணமும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இலவச பட்டா அரசு அதிகாரிகளுக்கு வழங்கமுடியாது என்றால் சரிதான். ஜம்பு என்பவர் 1984யில் ராணுவத்தில் சேர்ந்து பணிபுரிந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது- பட்டா வழங்கிய சமயத்தில் அரசு பணியில் ஜம்பு இருந்தார் என்றால் சரியல்ல.அதனை சரிவர விசாரணை செய்யாமல் பட்டா நாங்கள் வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அரசு பணியில் இருந்தால் அவர் பெயரில் இலவச பட்டா வழங்கமுடியாது என்றால் சரியல்ல. அன்றைய காலகட்டத்தில் இருந்த விதிமுறைகளின்படி வழங்கப்பட்டிருக்கலாம். 1992யில் இலவச பட்டா வழங்கியபோதும் அரசு பணியில் இருப்பவர்களுக்கு பட்டா வழங்ககூடாது என்று விதி அமலில் இருந்தது என்றால் சரிதான். ஒருவருக்கு பட்டா வழங்குவதற்கு பஞ்சாயத்தில் வழங்கப்படும் வீட்டு ரசீதுகளை வைத்துதான் மனுதாரர் அங்கு வசித்து வருகிறார் என்பதை உறுதி செய்து பட்டா வழங்குவோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ. 1 ஆவணத்தில் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழில் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் விசாரித்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது உண்மையான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள வாரிசு சான்றிதழ் வருவாய் துறையால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் விசாரணை செய்த அதிகாரிகளை கேட்டால்தான் தெரியும். நான் சா.சா.ஆ.1 ஆவணத்தில் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்றிதழின் உண்மை தன்மையை அதனுடைய கோப்புக்களை பார்த்தால்தான் உண்மை தண்மை குறித்து சாட்சியமளிக்க முடியும் என்றால் சரிதான். நாங்கள் பட்டா வழங்கியபோது ஜம்பு என்பவர் மேட்டூரில்

இல்லை என்றாலும் காஷ்மீரில் பணிபுரிந்து வந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆளும் இல்லாமல் ஆவணங்களும் இல்லாமல் அரசு பணியில் இருந்தார் என்ற உண்மை தன்மை தெரியாமல் வழங்கப்பட்ட பட்டா செல்லத்தக்க பட்டா அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பட்டாவானது முறையாக வழங்கப்பட்ட பட்டா இல்லை என்றாலும் அது போலியான ஆவணங்கள் மூலம் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/—உமாசங்கர்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—R. சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.